புதுமலர்: 22 இதழ்: 01 தை - மாசி

# அனல்

01.01.2025

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## வசந்தத்தின் ஆண்டு – 2025

## THE YEAR OF SPRING

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.**
ஏசாயா 43:19

**Behold, I will do a new thing.**
Isaiah 43:19

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்த்துக் கனிதரும் உன் வாழ்வு...!

எகிறியது என்னது வாழ்க்கை என்ற ஏக்கம்
நம்பியவர்கள் நல்லவர்கள் இல்லை என்பது
தெரிந்தது தொலைதூரப் பயணத்தின் பின்பே
மனதார நியாயக்கேடு செயலாக மிளிர்ந்த போது
ஏமாற்றப்பட்டேன் என்பதை ஏற்றுக்கொள்ள
மனங் கூட வியர்த்தது ஒரு கணம்
வாழ்வைக் கசக்க வைத்தனர் வழியை அடைத்து
நம்பியவர்கள் நட்டாற்றில் விட்டபோதே
தெரிந்தது இல்லை அவர்கள் உண்மையானவர்கள் என்று
வந்தது உனக்கு மற்றோரால் வேதனைகள் பல
இதைவிட
கிறிஸ்தவன் தான் நான் ஆனால் கிறிஸ்து இல்லை என்னுள்
இருந்தது வேதம் கையில் இல்லை வசனம் உள்ளில்
வார்த்தை இருந்தது வாயில்மட்டும் ஆவிக்குரிய மனிதன் நோயில் முற்றி
வெளியே எங்கும் உண்மை உள்ளில் பொய்மை எங்கும்
இரண்டாக்கினேன் நீதியை எனக்கொன்று மற்றோர்க்கின்னொன்று
வேதம் ஏந்தும் கரம் துதிநாதம் பாடும் நாவு
கூவியே வாயால் போட்டதே சத்தம்
தாவியே அணைத்த அன்பருடன் இல்லை உறவு நித்தம்
நித்திய வேலையை நிறுத்திவிட்டேன் அநித்திய வேலை பெற்றது பலம்
சத்தியத்தைப் பேச மறந்தேன் நித்திய தேவனை மறந்தேன்
தேடினேன் என் பெயரையும் புகழையும்
தேடவில்லை தேவ ராஜ்ஜியத்தையும் நீதியையும்
இருந்தது உனக்குள் பாவங்கள் பல
கிறிஸ்தவன் என்ற போர்வைக்குள் வாழும் சோகக்கதையது
நம்பாதே மற்றோனையும் உனையும்
பிடி வெளியே தாக்கும் சிறு நரிகளையும்
உன்னில் மறைந்திருக்கும் குழி நரிகளையும்
மற்றோரால் வந்தது மோசம்
நீ வாழ்ந்தது அதைவிட வேஷம்
புத்தாண்டில் வேண்டாம் இவையொன்றும்
நோக்கிப்பார் இயேசுவை!
மாறும் உன் வாழ்வு இவ்வாண்டில்
காய்த்துக் கனிதரும் உன்வாழ்வு...!

VM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

01. கவிதை
02. அனலின் குரல்
03. தேவன் தந்த வைரங்கள்
04. கதையும் கற்றதும்
05. நற்செய்திப்பகுதி
06. சிறுவர் வட்டம்
07. குறுக்கெழுத்துப்போட்டி - 123
08. வாலிபர் வளாகம்
09. வினா விடை - 125
10. பெண்கள் பக்கம்
11. அருட்பணியாளர் சரிதை
12. அனலின் புதுவருட வாக்குத்தத்த செய்தி
13. உன்னுடைய அம்மா



# ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**



**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

புத்தாண்டின் சகல மகிமையும் தேவனுக்கே உண்டாகட்டும். அன்பின் வாசக உள்ளங்களுக்கு வாழ்த்துக்கள்.

யுத்தங்களும் யுத்த செய்திகளும், இயற்கையின் அழிவுகள், அடங்காத சீற்றங்கள் அத்துடன் மனிதநேயங்கள் அற்ற செயல்கள், பெருகிய குற்றங்கள், எப்படி வாழ்வைக் கொண்டு செல்வது என ஏங்கித் தவித்தவர்களாய் புதிய வருடத்தில் கால்பதித்திருக்கின்றோம். ஆனாலும் திடமான ஒரு நம்பிக்கை எமக்குண்டு, சென்ற ஆண்டுகளில் இருந்த அதே தேவன் இவ்வருடமும் நம்முடன் இருக்கிறார். அவர் அற்புதமாய் நடத்துபவர்; அவர் கைவிடமாட்டார்.

**சங்கீதம் 37:27 தீமையை விட்டு விலகி, நன்மை செய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.**

சூழ்நிலைகள் எப்படியும் இருக்கட்டும் அதற்குள்ளும் நாம் வாழ வேண்டிய விதத்தை எம் தேவன் எழுதி வைத்திருக்கிறார். அவரின் விருப்பம் போன்ற ஒரு வாழ்வு இவ்வாண்டில் நாம் வாழவேண்டும். தீமையை வெறுக்கும் தேவன், தீமை செய்யாத கர்த்தர்; நாம் தீமை செய்யாத நீதிமான்களாய் வாழ எதிர்பார்க்கின்றார். தீமையை நினைப்பதும் தீமை செய்வதும் தேவன் வெறுக்கும் செயல். யாருடைய வாழ்வும் கெட்டுப்போகவோ, அல்லது மற்றோரை வேதனைக்குள் நடத்தும்படியான மறைவான செயல்களோ அல்லது தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக செயற்பாடுகளைச் செய்து மற்றோர் மனநோவடையும்படியான செயல்களையோ செய்யாதிருக்க வேண்டும்.

ஆமான் மொர்தெகாய்க்கு தீமை செய்ய நினைத்து செயற்பட்ட போது தேவன் அந்த தீமையை அவனின் தலைமேலேயே திருப்பிவிட்டார். உன் வாழ்வில் நீ அறியாமலேயே உனக்கு யாரும் தீமை செய்து உன்னை வேதனைப்படுத்த வலையில் அகப்படப்பண்ண முயற்சிக்கலாம், ஆனால் நீ தேவனுக்குரியவனாக தேவனுக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து நன்மை செய்கிறவனாய் இவ்வருடம் இருப்பாயானால் உனக்கு வரஇருக்கும் தீமையை அதைச் செய்பவர்கள் மீதே தேவன் திருப்பி விடுவார்.

இவ்வாண்டு ஓர் தீர்மானம் பண்ணிக்கொள்ளுங்கள். நான் நன்மை செய்வேன், ஒருவேளை எனக்கு தீமை செய்தவர்களாய் இருந்தாலும் நான் நன்மை செய்வேன் என்று. உனக்கு வரஇருக்கும் தீமையை தேவன் உனக்கு நன்மையாக மாற்றுவார்.

நன்மை செய்து ஆசீர்வதிக்கப்பட ஆண்டவர் அருள்புரிவாராக!

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2025

அனல்
சஞ்சிகையின்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்!



தேவனுக்குப்பயப்படும் பயத்துடன்,
நன்மை செய்து, நல்யோசனை செய்து,
நன்மைகளால் நிறைந்து,
ஆரோக்கியமும், சுகமும் பெற்று
ஆண்டவர் இயேசுவில்
நிலைத்திருந்து
குறைவின்றி வாழ
அனலின் வாழ்த்துக்கள்!

– ஆசிரியர் –

# தேவன் தந்த வைரங்கள்

தேவனுடைய
வார்த்தையைக் கருத்தில்
கொள்ளாமல் எமது
அதிகாரத்தைப்
பயன்படுத்திச் செய்யும்
அற்புதங்களும்
ஊழியங்களும் தேவனை
மகிமைப்படுத்தப்போவதில்லை

உலகத்தை ஜெயிக்கும்
உண்மையான
விசுவாசம், இயேசு
கிறிஸ்துவை விசுவாசித்து
ஏற்றுக் கொள்வதும்,
அவரைத் தொழுது
கொண்டு அவர்
வார்த்தையின் படி
வாழ்வதே

நான் திருப்தி
செய்யப்படுவது
முக்கியமல்ல; பிதாவின்
ஏக்கம் திருப்தி
செய்யப்படுவதே முக்கியம்

வாழ்வின் கடினமான
பகுதிகளை தேவ
விருப்பப்படி நிறைவேற்றி
பூரணமாய் முடிப்பதும்
தேவன் ஏற்றுக்
கொள்ளும் செயலாகும்

அழைக்கப்பட்ட ஊழியனே
வேதனையான பக்கங்களையும்
சந்தோசமாக நிறைவேற்றுவான்

—— VM ——



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## அமைதியான வாழ்வு

வை. விமலதாஸ்

ஒருவருக்கு வாழ்வில் ஒரே பிரச்சினையும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருந்தது. எனவே அவர் நினைத்தார்: நான் வாழ்வில் ஓடிக்கொண்டே இருக்கிறேன்... எனக்குத்தான் பல பிரச்சினைகள். வீட்டில் பிரச்சினை, தெருவில் பிரச்சினை, ஊரில் பிரச்சினை, வேலை செய்யும் இடத்தில் என எங்குமே பிரச்சினைகள். என்னால் தூங்கவே முடியவில்லை. இதிலிருந்து விடுபட எனக்கு ஒரு தீர்வு சொல்லுங்கள் என்று பெரியவர் ஒருவர் முன்பாக நின்றிருந்தான் அவன்.

அவன் சென்ற நேரம் மாலை நேரம். எனவே அப் பெரியவர் அவனிடம் நீ முதலாவது தோட்டத்திற்கு சென்று அங்கே ஒட்டகங்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றன என பார்த்துவிட்டு வா என்றார். சென்றவன் திரும்பி வந்து, ஐயா '100 ஒட்டகங்களும் நின்றுகொண்டு இருக்கின்றன' என்றான்.

அதைக் கேட்ட பெரியவர்: நல்லது நீ மறுபடியும் தோட்டத்திற்கு சென்று அந்த 100 ஒட்டகங்களும் தரையில் படுத்தவுடன், அங்கே இருக்கின்ற ஓய்வறையில் நீ படுத்து தூங்கிவிட்டு காலையில் திரும்பி வா... என்றார்.

சரி ஐயா, என்றவாறு தோட்டத்திற்கு சென்றவன் கண்களில் தூக்கமின்றி களைப்புடன் காலையில் திரும்பி வந்தான். அவனைப் பார்த்த பெரியவர்: ஏன் சோர்வாகவும், நித்திரை மயக்கமாகவும் இருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன் ஐயா இரவு முழுவதும் நான் தூங்கவே இல்லை என்றான். அப்படியா? என்ன நடந்தது என்றார் பெரியவர்? அதற்கு அவன்: ஐயா சில ஒட்டகங்கள் தானாகவே தரையில் படுத்துவிட்டன. இன்னும் சில ஒட்டகங்களை நான் கஷ்டப்பட்டு படுக்க வைத்தேன். ஆனாலும் அனைத்து ஒட்டகத்தையும் என்னால் படுக்க வைக்க முடியவில்லை. சிலது படுத்தால் சிலது எழுந்து கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து ஒட்டகத்தையும் ஒட்டுமொத்தமாக படுக்க வைக்க முடியவில்லை. அதனால் நான் தூங்குவதற்கு போகவே இல்லை என்றான்.

அதைக்கேட்ட பெரியவர் சிரித்தபடியே தம்பி 'இது தான் வாழ்க்கை... வாழ்க்கையில் பிரச்சினையை முடிப்பது என்பது ஒட்டகத்தை படுக்க வைப்பது போன்றது. சில பிரச்சினைகள் தானாக முடிந்துவிடும். சிலவற்றை நாம் கஷ்டப்பட்டு முடித்துவிடலாம். ஆனால் சில பிரச்சினைகள் முடிந்தால் வேறு சில பிரச்சினைகள் புதிதாக எழலாம். அனைத்து பிரச்சினையும் முடிந்தால் தான் நான் நிம்மதியாக தூங்குவேன் என்றால் இந்த உலகத்தில் யாராலும் தூங்க முடியாது. பிரச்சினைகள் அனைத்தும் எப்போது முடியும் என கவலைப்பட்டுக்கொண்டே இருக்காதே. தீர்க்க முடிந்தவற்றை தீர்த்துவிட்டு மற்றவற்றை ஆண்டவருடைய கரத்தில் ஒப்படைத்துவிட்டு உனக்கான ஓய்வறையில் நிம்மதியாக இருக்க கற்றுக்கொள் என்றார்.

இதைக்கேட்டு சென்றவன் சிலநாள் கழித்து பெரியவரிடம் வந்து, ஐயா சில ஒட்டகங்கள் படுக்கவில்லை என்றாலும் நான் இப்போது நிம்மதியாக படுத்து உறங்குகின்றேன் என்றான்.

ஆம் நண்பர்களே, எமது வாழ்வில் பிரச்சினைகள் என்பது நூறு ஒட்டகங்கள் போன்றது. அனைத்தும் ஒரே நேரத்தில் படுப்பதற்கான வாய்ப்பு குறைவே. ஒவ்வொன்றும் படுப்பதற்கான காலம் உள்ளது. அப்படியே நமக்கான பிரச்சினைகள் தீர்வதற்கான காலமும் உள்ளது. ஆகவே அனைத்தையும் ஆண்டவருடைய கரங்களில் ஒப்படைத்துவிட்டு பிறந்திருக்கும் இப் புத்தாண்டில் வாழ்வை அமைதியாக அனுபவிப்போம்.

**1பேதுரு 5:7 அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

புருஷன் மரித்தபோது நாய்கள் இரத்தத்தை மாத்திரம் நக்கினது,
அவனது மனைவி இறந்த போதோ இரத்தம், எலும்பு, மாமிசம்
யாவையும் நாய்கள் தின்றது. நாய்களால் சுவைக்கப்பட்ட கணவன்
– மனைவி (தம்பதி) யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2024 கார்த்திகை - மார்கழி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை**

பெல்ஷாத்சார் **(தானியேல் 5:2-8,30)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீமையை வெறுத்து விடுங்கள்



❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த புதிய ஆண்டிலே மறுபடியும் நற்செய்திப் பகுதியினூடாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஆண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்த தேவன், குறைவுகளை நிறைவாக்கி, வியாதியில் சுகம் தந்து, பிள்ளைகள் வாழ்வில் நன்மையானவைகளை நடப்பித்து, குடும்பங்களில் சமாதானத்தை அருளி சத்தியத்திலே உங்களை நிறைவாய் நடத்துவாராக. ஆமென்.

**சங்கீதம் 97:10 கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்து விடுங்கள்; அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார்.**

இந்தப் பூமியிலே நமக்கு தீமை செய்கிறவர்கள் அனேகர் இருக்கிறார்கள். மறைவாக அல்லது நேரடியாக தீமை செய்கிறார்கள். சிலர் தம்முடைய காரியங்களுக்காக மட்டும் ஒத்திசைந்து பின்பாக தீமையை மெதுவாக நடப்பிப்பார்கள்.

எரிச்சல், பொறாமை இவைகளால் சிலர் தீமையை நடப்பிக்கிறார்கள். சிலர் மற்றவர்கள் தங்களைவிட மேலே வரக்கூடாது என்பதற்காக தீமையை செய்கிறார்கள்.

சிலர் தங்கள் பேர் காக்கப்பட மற்றவர்களை வைத்து தீமையை நிறைவேற்றி விடுகிறார்கள். எது எப்படியிருந்தாலும் தீமை செய்கிறவர்கள் நம்மைச் சுற்றி அனேகர் இருக்கத்தான் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பிரியமானவர்களே இந்த புதிய ஆண்டில் பிரவேசிக்கும் உங்களுக்கு தேவன் ஒன்றை சொல்கிறார்: அது; **'நீங்கள் தீமையை வெறுக்க வேண்டும்'** என்பதே.

தீமையை வெறுப்பதென்பது மனிதர்களாகிய எம்முடைய இயல்பான சுபாவமல்ல. நாமும் தீமைக்கு தீமையை செய்யக்கூடியவர்கள் தான். ஆயினும் நாம் தீமையை வெறுப்பதற்கு ஒரே ஒரு வழி உண்டு அது நாம் **"கர்த்தரில் அன்பு கூருவதே"**.

ஆம் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே, நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் மற்றவர்கள் செய்யும் தீமைக்கு பதில் நன்மை செய்ய விரும்புகிறீர்களா? உங்கள் தேவனிடத்தில் உண்மையாக அன்பு கூருங்கள். நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் மட்டுமே தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்ய முடியும்.

நாம் மற்றவர்களுக்கு தீமைக்கு நன்மை செய்ய முடியாதபடியிருக்கிறோம் என்றால் நாம் உண்மையாக தேவனிடத்தில் அன்புகூரவில்லை என்பதே உண்மை.

பிரியமானவர்களே நீங்கள் தீமையை வெறுத்தால் மட்டுமே தேவனிடம் பரிசுத்தவானாக முடியும். தீமையை வெறுத்தால்தான் உங்கள் ஆத்துமாவை தேவன் அழிவில் நின்று காப்பாற்றுவார்.

தீமையை வெறுத்தால் மாத்திரமே துன்மார்க்கரின் கைக்கும் உங்களுக்கெராக எழும்பும் எல்லா பெலத்தவர்களுடைய கைக்கும் தேவன் உங்களைத்தப்புவிப்பார். **(சங்கீதம் 97:10)**

வேதாகமத்தில் யோசேப்பு என்ற மனிதனை அறிந்திருக்கிறீர்களா?

இவனுடைய வாலிப பருவ வயதிலிருந்து அதாவது அவனுடைய பதினேழு வயதிலிருந்து முப்பது வயது வரைக்கும் (ஏறத்தாள பதின்மூன்று ஆண்டுகள்) வாழ்வில் சம்பவித்தவைகள் அனைத்தும் மகா தீமைகளே.

சகோதரரால் கொடுமையாக நடத்தப்பட்டு அடிமையாக விற்கப்பட்டான். சென்ற இடத்தில் பிழையாக குற்றம் சாட்டப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறை, எல்லோராலும் மறக்கப்பட்ட வாழ்க்கை. சுற்றிலும் தீமை சூழ்ந்த நிலைமை. நன்மை கிடைக்கும் என்று நினைப்பதற்கு ஒரு பக்கமும் இல்லை. இப்படி தீமை செய்கிறவர்களுக்குள்ளே வாழ்ந்த யோசேப்பால் எப்படி நன்மை செய்து தீமையை வெறுக்க முடிந்தது? ஆம் அது அவன் தேவன் மேல் வைத்த அன்பு மாத்திரமேயாம்.

உங்களையும் உங்கள் மனம் தீமைக்கு தீமையை செய் என்று ஏவிக்கொண்டேயிருக்கிறதா? பிரியமானவர்களே இதிலே நீங்கள் ஜெயம் எடுப்பதற்கு கர்த்தரை நேசியுங்கள். தேவனை நேசித்தால் எம் இருதயத்திற்குள் இருக்கும் தீமையின் சுபாவம் அகன்று போய்விடும்.

**ஆதியாகமம் 50:20-21 (20.) நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடந்துவருகிறபடியே, வெகு ஜனங் களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். 21. ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளை யும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்ச மாய்ப் பேசினான்.**

பிரியமானவர்களே தனக்கு தீமை செய்த சகோதரர்களோடு பட்சமாக பேச யோசேப்பால் எப்படி முடிந்தது. ஆம்! காரணம் தேவனை அவன் நேசித்தாரே.

பிரியமானவர்களே நீங்கள் ஒருவேளை உங்களுடைய சகோதர ரோடு பகை உணர்வோடு, விரோதத் தோடு, கசப்போடு, சமாதானமாக வாழ முடியாதபடி பிளவோடு இருக்கின்றீர் களா?

நீங்கள் தேவனிடத்தில் உண்மையாக அன்பு கூர்ந்தால் தேவன் உங்களை சமாதானத்திற்கு நேராக நடத்துவார். தீமை செய்கிற வர்களுக்கு நன்மை செய்வது உங்களு டைய இயல்பான சுபாவமாகவே மாறி விடும்.

புதிய ஆண்டில் உங்கள் இருதயம் புதிதாகட்டும்.

தாவீது ராஜாவைப் பாருங்கள்: சவுல் ராஜாவாக இருக்கும் காலத்திலே தாவீதுக்கு எத்தனை தீமைகள், கொலை முயற்சிகள், பொல்லாப்பு இப்படி தீமை களே தாவீதை சுற்றி நின்றது. மரணத் திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமே இருக்கிறது என்றும் சொல்லும் அளவிற்கு தீமைகள் சூழ்ந்திருந்தது.

ஆனாலும் இப்படிப்பட்ட தீமை களை செய்ய காரணமாயிருந்தவனுக்கு தீமை செய்ய தாவீதுக்கு சந்தர்ப்பம் வந்த போது தாவீது அதை செய்ய வில்லை. காரணம் கர்த்தர் அபிஷே கம் பண்ணிய மனிதன் என்ற காரணம் ஒன்றே.

தாவீது கர்த்தர் மேல் வைத்த அன்பின் பூரணத்தினால் கர்த்தரு டைய அபிஷேகத்தை மதித்தான்.

பிரியமானவர்களே நீங்கள் இந்த பூதிய ஆண்டிலே தீமையை வெல்லுவதற்கு கர்த்தரிடத்தில் உண்மையாக அன்பு கூருவீர்களா?

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 122, வினா விடை - 124

## சரியான விடை எழுதியவர்கள்

| அனலைதீவு | திருநெல்வேலி |
|---|---|
| 01. க.நிதர்சிகா | 05. ந.செல்வன் |
| 02. ரு.சலோமி | |
| 03. ச.சர்பினா | |
| 04. ப.பவிசாளினி | |

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ ஜசிந்தா அக்கா




புதிய ஆண்டிற்குள் வந்திருக்கும் அனலின் அன்பான தம்பி, தங்கையரே உங்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

சென்ற வருடத்தில் உங்களுக்கு இயேசப்பா படிக்க உதவி செய்தார், பாதுகாத்தார், உணவு தந்தார், நல்ல சுகங்கள் தந்தார். அப்பா அம்மாவைத் தந்து உங்களை வழி நடத்திப் புதிய ஆண்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார். இந்த ஆண்டிலும் உங்களை ஆசீர்வதிக்கப்போகிறார். ஆகவே தம்பி, தங்கையரே!

'இயேசப்பாவிற்கு நன்றி சொன்னீர்களா?'

பிள்ளைகளே இயேசப்பா இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களில் ஒரு நாள் ஒரு கிராமத்திற்குள்ளே சென்றார். அப்பொழுது குஷ்டரோக வியாதியுள்ள மனுஷர் பத்துப்பேர் இயேசுவிற்கு எதிராக வந்து தூரத்திலே நின்று, 'இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்' என்று சத்தமிட்டார்கள்.

குஷ்டரோகம் மிகவும் பயங்கரமான வியாதி. இது உடம்பின் எந்தப் பகுதியில் வருகின்றதோ அந்தப் பகுதிகள் அழுகிவிடும். அதிலிருந்து துர்நாற்றம் வரும். கெட்ட நீர் வடியும். இந்த வியாதி வந்தவர்கள் யாரோடும் சேர்ந்து இருக்க முடியாது. தூரமான இடங்களில் தனிமையாக இருக்க வேண்டும். ஆனால் இவர்களுடைய நண்பர்கள் குஷ்டரோகிகளாகவே இருப்பர். இந்த வியாதியை யாராலும் குணப்படுத்த முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே தான் குஷ்டரோகிகள் இயேசுவைக் கண்ட உடனே 'இயேசு ஐயரே! எங்களுக்கு இரங்கும்' என்று சத்தமிட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, நீங்கள் போய் உங்களை ஆசாரியருக்கு காண்பியுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

என்ன...... ஆ...ச்சரியம்...! அழுகிய நிலைமை நீங்கியது...! நாற்றம் அகன்றது...! வேதனைகள் விலகியது...! பத்துப்பேருடைய சரீரங்களும் முற்றுமாய் புதிதாகிவிட்டது! பிள்ளைகளே காரணம் என்ன தெரியுமா? இயேசு சுவாமியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்கள்.

தம்பி, தங்கையரே உங்களுக்குள்ளும் எரிச்சல், பொறாமை, சண்டைகள், கீழ்ப்படியாமை, விட்டுக்கொடுக்காமை, பொய் சொல்லுதல், கோள்சொல்லுதல், மற்றவர்களை நேசிக்க முடியாத தன்மை, இவைகளைப் போல் இன்னும் பல பாவப்பழக்கங்கள் உங்களுக்குள்ளே குஷ்டரோக வியாதியைப் போல இருப்பதால் மற்றப் பிள்ளைகள் உங்களோடு சேர்ந்து விளையாடவோ, படிக்கவோ விரும்பாமல் இருக்கலாம். இது உங்களுக்கு மிகவும் துக்கமாய் இருக்குமல்லவா? இதிலிருந்து யாரும் உங்களுக்கு விடுதலை கொடுக்க முடியாது. நீங்களும் இயேசுவைப் பார்த்து 'இயேசு ஐயரே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடுங்கள்' அவர் உங்களுக்கு இரங்குவார். இயேசு அப்பாவின் வேத வசனங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். சுத்தமாவீர்கள்.

'உங்கள் இருதயம் புதிதாக மாறிவிடும்; உங்களை வெறுத்தவர்கள் உங்களை நேசிப்பார்கள்'

சுத்தமான பத்துப்பேரில் ஒருவன் மாத்திரமே திரும்பி வந்து இயேசுவிற்கு நன்றி சொல்லித் தேவனை மகிமைப்படுத்தினான்.

நீங்களும் நன்றி நிறைந்த உள்ளத்தோடு இயேசுவிற்கு நன்றி சொல்லுங்கள். விசேஷித்த ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வீர்கள்.

**கொலோசெயர் 3:15 நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.**

---



**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 124**
**க.நிதர்சிகா**
**(அனலைதீவு)**



**குறுக்கெழுத்துப் போட்டி - 122**
**ந.செல்வன்**
**(திருநெல்வேலி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | X | | | | | 02 |
| | 04 | | X | X | X | | | 03 |
| | | | 05 | 06 | | | | |
| X | | | | X | 07 | | | |
| | | 08 | | | | | | X |
| | | | | X | | | | 09 |
| | | | | 10 | | | | X |
| | | | | X | | | | 11 |
| 12 | X | | X | | | | | 13 |

## குறுக்கெழுத்துப் போட்டி 123

**இடமிருந்து வலமாக**

01. இஸ்ரவேலை எண்ணத்துவக்கியும் முடிக்காதே போனவன்
06. இவன் தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத் தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான்
07. அகசியாவின் மகனாகிய யோவாசைக் களவாய் எடுத்தவள்
08. இவன் மரணத்திற்கு பாத்திரவானாயிருந்தும் இவனைக் கொல்லமாட்டேன் என சாலமொன் கூறினான்
10. "கர்த்தர் என் கால்களுக்கு வலை வீசினார்" என்று சொன்னவன்

**வலமிருந்து இடமாக**

02. யெப்தாவுக்குப் பிறகு இஸ்ரவேலை நியாயம் விசாரித்தவன், இந்த ஊரைச் சேர்ந்தவன்
03. "கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது" என்ற பழமொழியை சொன்னவர்
09. உன் துணிகரத்தையும் உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன் என்று தாவீதிடம் கூறியவன்
11. "................ இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான்"
13. "அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்டதினால் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தோம்" என்று கூறியவன்

**மேலிருந்து கீழாக**

01. அம்பு பட்டவுடன் தன் இரதத்தில் சுருண்டு விழுந்தவன்
02. இவள் கெங்கிரேயா சபையின் ஊழியக்காரி
04. இந்தப் பூர்வ நதியில் சிசெரா தோற்கடிக்கப்பட்டான்
05. இவன் பேதையான புறாவைப் போல் இருக்கிறான்
08. யோவாப்பின் வாற்கோதுமை நிலத்தை தீக்கொளுத்தும்படி வேலைக்காரரை அனுப்பியவன்

**கீழிருந்து மேலாக**

08. ஈசாயின் குமாரரில் சவுலோடே யுத்தத்திற்கு போனவர்களில் ஒருவன்
12. அதோனியாவிடம் இது காணப்படுமாயின் அவன் சாகவேண்டும் என சாலமொன் கூறினான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமென்கிற மனம்




❑ போதகர் வை.தேவதாஸ்




கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. பிரியமுள்ள அனல் சஞ்சிகையின் வாலிபர் வளாகத்திற்குரிய அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த வருடம் முழுவதும் எம்மைப் பாதுகாத்து, போஷித்து வழிநடத்திய தேவாதி தேவனுக்கு கோடி கோடி ஸ்தோத்திரம். அவர் நம்மைக் கைவிடவில்லை, மறக்கவில்லை. அவர் நம்முடனே கூட இருந்தார். சோதனை, வேதனை வேளைகளில் அவைகளைக் கடந்துவர பெலன் தந்தார். ஒன்றுமில்லாத வேளைகளிலும் அவர் நமக்கு சகாயராக இருந்து உதவி செய்தார். குறிப்பாக தேவ பிள்ளைகளே! **இனி நான் என்ன செய்வது? என்று கலங்கின வேளைகளிலெல்லாம் அவர் எம்மைத் தாங்கி சரியான வழியில் நடத்தி நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதபடி மகிமையான காரியங்களை நம் வாழ்வில் செய்தார்.** அவருக்கே ஸ்தோத்திரம்.

மேலும் வாலிபர் வளாகத்தில் தொடர் வேத பாடங்களை உங்களுடன் பகிர்ந்து வருகின்றோம். அந்த வகையில் இன்று அத்தொடர் வேதபாடங்களை இந்த இதழில் நிறுத்தி இப் புதிய ஆண்டிலும் சில வேத வசனங்களின் மூலமாக ஒரு தியானப்பகுதியூடாக உங்களை சந்திக்க விரும்புகின்றேன். கர்த்தருடைய இவ் வார்த்தைகள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். கருத்துடனே வாசித்து வேதாகம வெளிச்சத்தில் நடக்க உங்களை அர்ப்பணியுங்கள். கர்த்தருடைய வார்த்தைகள் ஒரு நாளும் வெறுமையாகத் திரும்புவதில்லை — ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமென்கிற மனம்

இப் புதிய ஆண்டிலும் எமது மனம் தொடர்புபட்ட விடயங்களை பேசும்படி ஆவியானவர் பாரப்படுத்தினார். ஆகவே சற்று பொறுமையோடு தேவ வசனங்களை நிதானிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

முதலாவதாக மனம் என்றால் என்ன என்பதனைக் குறித்துப் பார்க்கும் பொழுது; 'அது எமது சிந்தனைகள், நோக்கங்கள், உணர்ச்சிகள், கற்பனைகள் போன்றவற்றின் மூலமாக வெளிப்படுகின்ற அறிவு மற்றும் உணர்வு நிலை' சார்ந்த காரியங்களை குறிப்பிடுகின்றது.

ஆகவே இப் புதிய ஆண்டிலும் நமது மனம் தொடர்புபட்ட சிந்தனைகளில் நாம் ஒரு தெளிவோடு இருப்பது நல்லது. மனதைக் குறித்த காரியங்களில் வேதாகமம் பல வசனங்களைக் கூறுகின்றது. அதில் ஒரு வசனம் இப்படியாக உள்ளது:

**பிரசங்கி 6:7 மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை.**

இங்கே மனுஷனின் பிரயாசத்தையும் அவனது மனநிலையையும் வேதாகமம் அழகாக விவரிக்கின்றது. எவ்வளவு பிரயாசப்பட்டாலும் மனமானது திருப்தி நிலையை அடையாமல் அலைபாய்ந்து கொண்டே இருக்கின்றது. இன்னும் சேர்க்க வேண்டும், இன்னும் அனுபவிக்க வேண்டும் என்று மனம் அலைபாய்ந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் தேவ பிள்ளைகளே எமது மனம் வெறுமையானதாகவோ, அலைபாய்ந்து கொண்டிருப்பதாகவோ இருக்காமல் அது நிறைவானதாகவும், திருப்தியுள்ளதாகவும் இருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கின்றார்.

**1தீமோத்தேயு 6:6 போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.** ஆம் நமக்கு போதுமென்கிற மனது இருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். நமக்கு இருப்பவைகள் போதுமென்ற திருப்தி அவசியமாகும். நாம் இவ் உலகில் பெற்றுள்ள அனைத்தும் தேவ கிருபையே என நினைக்க வேண்டும். ஏனெனில் இந்த உலகத்திற்கு நாம் வெறுங்கைகளோடு தான் வந்தோம் என்பதனை மறக்கக்கூடாது.

அத்தோடு இந்த பூமியில் இருந்து நாம் வெளியேறும் போது எல்லாவற்றையும் விட்டுவிட்டு வெறுமையாகத் தான் செல்லப்போகின்றோம். இவைகளை நாம் நினைத்து வாழும்பொழுது நமது மனம் தேவையற்ற விடயங்களில் அலைபாய்வதனை தடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிலிப்பியர் 4:11 ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மிய மாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.**

என பவுல் சொல்வது போல் இந்த வருடம் மட்டுமல்ல எப்பொழுதும் எமது வாழ்வில் இந்த மனரம்மியத்தைக் கடைப்பிடிப்போமானால் எமது வாழ்வு சமாதானத்தால் நிரப்பப்பட்டதாக இருக்கும்.

ஆகவே வாசகர்களே, நீங்கள் எந்த வயதுள்ளவராகவும் இருக்கலாம். குறிப்பாக உங்கள் அனைவருக்குமான வார்த்தை என்னவெனில் நடக்கு கிடைத்த வாழ்க்கையை திருப்தியோடு வாழக்கற்றுக்கொள்வோம்.

வாலிப பிள்ளைகளே நீங்கள் திருப்திபட வேண்டிய விடயங்களில் இரண்டு காரியங்களை சுருக்கமாகத் தியானிப்போம் வாருங்கள்.

## 01. தேவன் நமக்குத் தந்த குடும்ப உறவுகளில் மனத்திருப்தியோடு வாழவேண்டும்

பிள்ளைகளே ஆண்டவர் எமக்கு பெற்றோர்களையும், சகோதர சகோதரிகளையும் கொடுத்துள்ளார். இந்த சூழ்நிலையில் பலர் நினைக்கும் காரியம் என்னவெனில் நான் வேறொரு பெற்றோரின் வயிற்றில் பிறந்திருந்தால் நன்றாக இருந்திருப்பேன். என் வாழ்வின் துன்பங்களுக்கு காரணம் என் கூட பிறந்த சகோதரர்களே. வேறு இடங்களில் சகோதர சகோதரிகள் ஒருவருக் கொருவர் எவ்வளவாக உதவி செய்து உயர்த்தி விடுகிறார்கள். ஆனால் எனது சகோதரர்களோ என்னைத் திரும்பிக் கூட பார்ப்பதில்லையே என மனமுடைந்து வாழாதீர்கள். என் பெற்றோர் எனக்கு என்னத்தை தான் தேடி வைத்துள்ளனர்... எல்லாவற்றையும் நினைத்தால் என் வாழ்க்கையே வெறுத்துப் போகின்றதே என வேண்டா வெறுப்போடு வாழ்வதை நிறுத்தி, இந்தப் பெற்றோர் எனக்கு தேவன் தந்த ஆசீர்வாதங்கள் என்றும், என் கூடப்பிறந்த சகோதரர்கள் தேவன் எனக்கு அருளிய ஈவு எனவும் நினைத்து முதலாவது **'உங்களது குடும்பத்தைக் குறித்த திருப்தியோடு வாழும்படி'** உங்களை நினைப்பூட்டுகின்றேன்.

யோவான் 09ஆம் அதிகாரத்தில் ஓர் மனிதனைக் குறித்து காண்கிறோம். அவன் பிறக்கும் போதே குருடனாகப் பிறந்துவிட்டான். இந்த நிலையில் அவன் வளர்ந்து வருகின்றான். அக்காலகட்டத்தில் இயேசுவை அறிக்கையிடுபவர்கள் ஜெப ஆலயங்களை விட்டு நீக்கப்பட்டு தனித்துவிடப்படுவார்கள் என்ற நிலைமை இருந்தது.

இச் சூழ்நிலையில் இயேசு அவனைத் தேடிச் சென்று சுகமாக்கினார். உண்மையில் அவனுடைய பெற்றோர் அச் சூழ்நிலையில் அவனுக்கு உறுதுணை யாக நின்று செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடந்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசேயர் அவனையும் அவனது பெற்றோரையும் விசாரணைக்கு அழைத்தனர். விசாரணையின் போது அம் மனிதன் தன்னை சுகப்படுத்தியவர் இயேசுவே எனத் தெளிவாகவும் தைரியமாகவும் சொன்னான். தங்கள் பிள்ளைக்கு நெருக்கடியான நேரத்தில் ஒத்தாசையாக இருக்க வேண்டிய பெற்றோர் பரிசேயருக்கு சொல்லும் பதிலை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

**யோவான் 9:22-23 (22.) அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். 23. அதினிமித்தம்: இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய்தகப்பன்மார் சொன்னார்கள்.**

அற்புதமாகவும், இலவசமாகவும் தங்களது மகன் சுகம் பெற்றிருக்கின் றான். மகிழ்ச்சி அடைந்து தங்கள் பிள்ளையின் சாட்சியை அங்கீகரித்து அதற்கு ஒத்தாசையாக இருக்க வேண்டிய பெற்றோர் பரிசேயரின் கட்டுப்பாட்டுக்குப் பயந்து கோழைத்தனமாகவும், தன்னலமிக்கவர்களாகவும் செயற்பட்டு முடிவு எடுக்கும் தீர்மானத்தை தங்கள் பிள்ளையின் பக்கமாக திருப்பிவிட்டனர். அந்த இடத்தில் அம் மகன் தனித்து விடப்பட்டாலும் உண்மை எதுவோ அதற்குத்தைரியமாக நின்றான்.

அதுபோலவே பிள்ளைகளே, சில வேளைகளில் உங்கள் சூழ்நிலைகளும் அமையலாம். அதற்காக உங்கள் பெற்றோரையோ உடன் பிறப்புக்களையோ குறை கூறாமல் திருப்தியோடு வாழுங்கள். இயேசு உங்களுக்கு துணையாக நிற்பார்.

தாவீதும் கூட பல தடவைகள் குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டார். தாவீதின் வீட்டிலே சாமுவேலின் வருகையினிமித்தம் பெரிய விருந்தே நடைபெறுகின்றது. ஆனாலும் தாவீது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். சாமுவேல் தாவீதை அழைக்கச் சொன்னமையால் தான் தாவீது தகப்பனால் அழைக்கப்பட்டார். தன் சகோதரர் யுத்தத்தில் இருப்பதனால் அவர்களை விசாரித்து போசிக்கச் சென்ற போதும் கூட சகோதரனின் நிந்தைப் பேச்சுக்குள்ளானார். தனது அனுபவங் களைக் குறித்து சங்கீத புத்தகத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

**சங்கீதம் 69:8 என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்.**

இந்த வசனம் இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசன வசனமும் கூட. இயேசுவும் இதே பாதையினூடாக நடந்து சென்றார். இருப்பினும் தாவீதோ, இயேசுவோ தங்கள் குடும்பத்தை ஒதுக்கவில்லை.

ஆம் வாலிப பிள்ளைகளே, உங்கள் குடும்பத்தைக் குறித்து அதிருப்தியோடு இருக்க வேண்டாம். மனநிறைவோடு வாழுங்கள். கர்த்தர் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது நாங்கள் திருப்திப்பட வேண்டிய விடயம் என்னவெனில்,

## 02. நாம் செய்கின்ற தொழில் போதுமானது

**நாங்கள் செய்கின்ற தொழிலைக் குறித்து, எங்களது வருமானங்களைக் குறித்தும் மனநிறைவு எமக்கு இருக்க வேண்டும்.** அனைவரும் பொருளாதாரத்தில் முன்னேறத்தான் வேண்டும். அதற்காக சடுதியாக சாதிக்க வேண்டும் என துடிக்க வேண்டாம்.

உள்ளூரில் நல்ல பல வேலைகளைச் செய்தவர்கள் வெளிநாட்டு ஆசையால் பணத்தை மாத்திரம் அல்ல; வாழ்க்கையையே தொலைத்தவர்கள் பலருண்டு. தொலைபேசியில் வரும் செய்திகளை நம்பி இருந்த பணத்தையும் கைவிட்டவர்கள் உண்டு.

மோசேயைப் பாருங்கள். ராஜ குடும்பத்திற்குள் உள்வாங்கப்பட்டு ராஜ வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருந்தவர். ஒரு கட்டத்தில் உண்மையை உணர்ந்து அவர் வெளியேறிய போது அவருக்கு கிடைத்த தொழில் என்ன?

**யாத்திராகமம் 3:1 மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான்.**

பாருங்கள் ராஜ்ஜியபாரத்தில் வளர்ந்து அதன் நுணுக்கங்களை கற்றுக்கொண்டவனுக்கு இப்பொழுது என்ன வேலை? 'ஆடு மேய்த்தல்' இருப்பினும் அதனை மனப்பூர்வமாகச் செய்து வந்தார். நீங்கள் செய்யும் வேலை தேவனுக்கு முக்கியமல்ல (பாவமான தொழில்கள் விதிவிலக்கு) அதனை எவ்வளவு திருப்தியோடு செய்கின்றீர்கள் என்பதனையே தேவன் எதிர்பார்க்கின்றார்.

வறட்டு கௌரவங்களைவிடுத்து உங்கள் கரங்களால் பிரயாசப்படுங்கள். அதில் வரும் வருமானங்களைக் குறித்து மனம் சலித்துக் கொள்ளாமல் தேவனுக்கு நன்றி செலுத்தி வாழப்பழகுங்கள்.

**லூக்கா 3:14 உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள்**

எனவே தேவ பிள்ளைகளே சுருக்கமாக தேவ சமூகத்தில் இருந்து இவ் இரண்டு பகுதிகளையும் உங்களுக்கு விவரித்தேன். இன்னும் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உணர்த்தும் அனேக காரியங்கள் உண்டு.

எல்லாவற்றிலும் மனத்திருப்தியோடு போதுமென்ற மனதுடனே வாழுங்கள். சமாதானம் உங்களை நிரப்புவதாக.

மறுபடியும் புதுவருட வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா விடை - 125

01. அத்தி மரத்துக்குக் கீழிருந்தவன் யார்?

02. ஒரு கிணற்றின் வாயிலிலிருந்த கல்லை புரட்டித் தள்ளினவன் யார்?

03. திராட்ச செடியின் நிழலிலும் அத்தி மரத்தின் நிழலிலும் சுகமாய் தங்கியிருந்தவர்கள் யார்?

04. தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டவன் யார்?

05. முத்திரை போடாத ஒரு கடிதத்தை அனுப்பினவன் யார்? யாருக்கு?

06. சாலொமோன் கட்டின தேவாலயத்தில் விக்கிரக சிலையைப்பண்ணி ஸ்தாபித்த ராஜா யார்?

07. இஸ்ரவேலர் தங்கள் ஆபரணங்களை கழற்றிப்போட்ட இடம் எது?

08. கர்வாலி மரத்தின் கீழ் அடக்கம் பண்ணப்பட்ட ராஜா யார்?

09. ஒன்றுமில்லாத ஏழைகளுக்கு திராட்ச தோட்டங்களையும் வயல் நிலங்களையும் கொடுத்தவன் யார்?

10. அத்தி மரத்தின் மேல் ஏறியிருந்தவன் யார்?

# குறுக்கெழுத்துப் போட்டி - 122

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. தீமையை (நீதிமொழிகள் 8:13)

06. எக்லோன் (நியாயாதிபதிகள் 3:12-13)

07. யோசியா (2நாளாகமம் 35:22)

09. மொர்தெகாய் (எஸ்றா 2:7)

12. ஐசுவரியவான் (யாக்கோபு 1:11)

14. சிம்சோன் (நியாயாதிபதிகள் 16:30)

**வலமிருந்து இடமாக**

02. எசேக்கியா (ஏசாயா 37:1)

05. ராமதாயீம் (1சாமுவேல் 1:1)

08. நாதாப் (லேவியராகமம் 10:1)

11. யெசுவாயோவாப் (எஸ்தர் 2:6)

15. பவுல் (அப்போஸ்தலர் 1:10)

**மேலிருந்து கீழாக**

01. தீமோத்தேயு (கொலோசெயர் 1:4)

03. கொரிந்து (1கொரிந்தியர் 1:5)

04. யோசுவா (யோசுவா 1:9)

06. எர்மோனை (உபாகமம் 3:9)

**கீழிருந்து மேலாக**

10. கர்த்தர் (ஆமோஸ் 1:5)

13. பவுல் (பிலிப்பியர் 3:11-14)

2025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ திருமதி. V.பிலிப்




## அவள் விளக்கு அணையாதிருக்கும். நீதிமொழிகள் 31:18b

**"பிரகாசித்து எரிந்து உருகிப் போகும் மெழுகுவர்த்தியல்ல, ஞானவான் சாலமொனுக்கே சவால் விட்ட அணையாத விளக்கு அவள்"**

இயேசு கிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் அனல் வாசகர்களுக்கு என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். காலங்கள் மிக வேகமாக உருண்டோடுகிறது. காரணம் மணவாளன் இயேசு கிறிஸ்து தனக்காக நியமிக்கப் பட்டிருக்கும் மணவாட்டியை அழைத்துச் செல்ல மத்திய ஆகாயத்தில் வரப்போகிறார் என்பதை காண்பிக்கிறது.

வருடம் ஆரம்பிக்கிற பொழுது பெண்களுக்கு பலவிதமாக வேலைப்பழுக்கள், குடும்ப சுமைகள், தேவைகள், எதிர்பார்ப்புக்கள், அழுத்தங்கள் என பல காரியங்களை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்து, பார்த்து கவனித்து செய்யக்கூடிய திறமை கொண்டவர்கள் தான் பெண்களாகிய நீங்கள்.

ஆனாலும் சிலர் உங்களுடைய வாழ்க்கையைக் குறித்து மிகவும் மனங்கசந்தவர்களாக, பெலவீனப்பட்டவர்களாக, தோல்வி மனப்பான்மை உள்ளவர்களாக, எதிர்காலத்தைக் குறித்த பயம் நிறைந்தவர்களாக, சரியான தீர்மானங்களை எடுக்க முடியாதவர்களாக வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களினால், கணவன் - மனைவிக்கிடையில் ஏற்பட்ட மனஸ்தாபங்களினால், பிள்ளைகளின் வாழ்க்கையில் இருக்கிற குறைவுகளினால் மனம் நொந்தவர்களாக, உடைந்த பாத்திரமாக மங்கி எரிகிற திரிகளாக அணைந்து விடுவோமோ என்று அங்கலாய்த்து, கிலேசப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிற பெண்களே... உங்களுக்கு ஓர் நல்ல செய்தி சொல்ல விரும்புகின்றேன்: "நீங்கள் அணைந்து போவதில்லை".

உங்கள் முடிவுகளில் இருந்து புதிய ஆரம்பத்தை தர ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆயத்தமாய் இருக்கிறார். வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியில் ஆறுகளையும் உண்டாக்குகிற தெய்வமல்லவா அவர்... ஆகவே உங்களுடைய குடும்பத்தை, சபையை, தேசத்தை காக்கிற ஜாமக்காரியாக மாற்ற விரும்புகிறார் கர்த்தர். 'புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுகிறாள்' என்ற வார்த்தை எத்தனை உண்மையாயிருக்கிறது.

வேதத்தில் இருந்து மூன்று விதமான பெண்களை அவதானிக்கிற பொழுது அவர்களைப் போலவே உங்களுடைய வாழ்க்கையையும் மாற்ற தேவன் வல்லவராயிருக்கிறார்.

## 01. தீர்க்கதரிசியின் மனைவி

**2இராஜாக்கள் 4:4 உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான்.**

அறைக்கதவைப் பூட்டி பாத்திரம் நிரம்பி வழியத்தக்கதாக தேவனோடு ஒரு உறவு நிலைக்குள்ளாக வரவேண்டும். வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால் பின்மாற்றம் அடைந்தவர்களாக, ஆண்டவரோடு கோபித்துக் கொண்டு அவரோடுள்ள உறவை துண்டித்தவர்களாக உங்களுடைய இஷ்டப்படி வாழ்ந்தது போதும்.

இன்று ஓர் புதிய ஆரம்பத்தை தொடங்குங்கள். உள்ளே போய் அறைக்கதவை பூட்டி அவருடைய பாதத்தில் அமர்ந்திருந்து வேண்டாத பாவங்கள், பாரங்களை அகற்றி அவரைப்பாடி புகழ்ந்து ஆராதியுங்கள். அப்பொழுது உங்கள் புத்திக் கெட்டாத தேவசமாதானம் உங்கள் இருதயங்களை ஆட்கொள்ளும். நீங்கள் எதிர்பாராத இடங்களில் இருந்து சகாயங்கள் உங்களைத் தேடி வர ஆண்டவர் கட்டளையிடுவார். புத்தியுள்ள ஸ்திரீகளாக நடந்து கொள்ளுங்கள். தேவனோடு சரியான உறவுக்குள்ளாய் வருகின்ற போது நீங்கள் அணைந்து போவதில்லை.

## 02.அபிகாயில்

**1சாமுவேல் 25:23 அபிகாயில் தாவீதைக் காண்கையில், தீவிரமாய்க் கழுதையை விட்டு இறங்கி, தாவீதுக்கு நேராகத் தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்து.**

இந்த ஸ்திரீ தன் குடும்பத்தின் விளக்கு அணையாதபடி புத்தியாய் நடந்து கொண்டாள். இவள் புத்தியுள்ளவள் மட்டுமல்ல விசுவாசமும் தைரியமும் உள்ளவள். சுவரில் நீர் விடும் ஒரு நாயைக் கூட பொழுது விடிவதற்குள் உயிரோடே வைப்பதில்லை என்ற உக்கிரமான கோபத்தோடு வந்த தாவீதிற்கு முன்பாக தீவிரமாக கழுதையைவிட்டு இறங்கி, தாழ்மையாய், பணிவாய் நடந்து கொண்டதினிமித்தம் அவனுடைய கோபத்தை தணித்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங் கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்' என்ற வார்த்தையை நினைவில் கொள்ளுங் கள். இந்த அபிகாயில் தன்வீட்டை, குடும்பத்தை, தேசத்தை தன்னுடைய புத்திசாதுரியத்தால் காப்பாற்றுகிறாள். கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப் படுகிற பொழுது அவருடைய அளவற்ற கிருபை யும் தயவும் உங்களை சூழ்ந்துகொள்ளும். நீங்களும் புத்தியாய், தாழ்மையாய் நடந்து கொள்ளுகிற பொழுது பெண்களாகிய உங்கள் விளக்கு அணைந்து போவதில்லை.

## 03. பத்துக் கன்னிகைகள்

**மத்தேயு 25:4, 6, 10 (4.) புத்தியுள்ளவர் கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள். 6. நடுராத்திரியிலே: இதோ, மண வாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டா யிற்று. 10. அப்படியே அவர்கள் வாங்கிப்போன போது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயி ருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக் குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப் பட்டது.**

நடுராத்திரியிலே மணவாளன் வருகி றார் என்று குறிப்பிட்டு வசனம் காண்பிக்கிறது. நடுராத்திரி என்று சொல்லுகிற போது எல்லோ ரும் நித்திரை மயக்கம் அடைகிற நேரமாயிருக் கிறது. அந்த வேளையிலும் புத்தியுள்ளவர்கள் ஆயத்தமாய் இருந்தார்கள். அதிகாலையில் எழுந்து ஆண்டவரைத் தேட வேண்டும். குறிப் பாக பெண்கள் அதிகாலையில் எழுந்து குடும்பத்திற்காக, சபைக்காக, தேசத்திற்காக ஜெபிக்கின்ற பொழுது ஆச்சரியமான பதில் களைப் பெற்றுக் கொள்வீர்கள்.

பத்துக் கற்பனைகளைப் பெற மோசே இருட்டோடே எழுந்து செல்கிறார். இயேசுவைப் பார்க்க ஸ்திரீகள் இருட்டோடே எழுந்து கல்லறையினிடத் திற்கு செல்கிறார்கள். 'அதி காலையில் என்னைத் தேடு கிறவன் கண்டடைவான்' என்ற வார்த்தை பொய் சொல்வ தில்லை. நிச்சயமாக பதில் களைப் பெற்றுக் கொள்வீர் கள். உங்கள் விளக்கு அணைந்து போவதில்லை.

ஆகவே உங்கள் குடும் பத்தை, சபையை, தேசத்தை காப்பாற்றும் ஜாமக்காரி நீங் கள் தான். வேதத்தில் குறிப் பிட்டு காண்பித்திருக்கும் இவர் கள் தங்கள் புத்திசாதுரியத் தால் தங்கள் விளக்கு அணை யாதபடி காத்துக் கொண்டார் கள். எனவே நீங்களும் கர்த் தரோடு ஒரு உறவை ஏற்படுத்த பிரயாசப்படுகின்ற போது உங் கள் விளக்குகளும் அணைந்து போவதில்லை. அதிகாலையில் அவரைத் தேட ஆயத்தப்படுங் கள். அவர் உங்களை சந்திக்க ஆயத்தமாய் இருக்கிறார். உங்கள் வாழ்க்கையை சீராக்கி, நேர்த்தியாக்கி, புதிய காரியத்தை செய்ய வல்லமையுள்ள தேவ னாக உங்கள் வாழ்க்கையில் வெளிப்படுவார். 2025ஆம் ஆண்டு பெண்களாகிய உங் களுக்கு புதுமையான காரியங் களை தோன்றச் செய்யும் ஆண்டாக கர்த்தர் மாற்று வாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆரிஜன்
## 182 - 251



### உடலிலும் உள்ளத்திலும் இறைவனைத்தேடு

மாலை நேரம், சூரியன் தன் கதிர்களைத் தன்னுள் இழுத்துக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியே அவற்றை ரசித்துக் கொண்டிருந்தான் சிறுவன் ஆரிஜன்.

வெட்டுக்கிளிகள் புறப்பட்டு வருவது போல வேகத்துடனும் விறு விறுப்புடனும் போர்வீரர்கள் அவன் வீட்டை நெருங்கி வந்தனர். சிறிது நேரத்திற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. ஆம், கிறிஸ்துவைப் பின்பற்றியதாலும், கிறிஸ்துவை பிறர்க்கு எடுத்துக் கூறியதாலும் மரண தண்டனைக் கைதியாக அவர் தந்தை இழுத்துச் செல்லப்பட்டார். அதன்பின் அவர் தந்தை திரும்பவே இல்லை. என்ன ஆனார் என்றே தெரியவில்லை.

இளம் வயதில் இக்காட்சி ஆரிஜன் உள்ளத்தில் முற்றிலும் தாக்கத்தை உண்டுபண்ணியது. தந்தையைப் போன்று கிறிஸ்துவுக்காக மரிக்க ஆயத்தமானார்.

பதினேழு வயதில் ஓர் கல்லூரியின் தலைமை ஆசிரியரானார். பக்தியான வாழ்க்கையினால் மாணவர்களின் மனதைக் கவர்ந்தார். 17 வருடங்கள் கடந்தன.

டிசியஸ் என்ற அரசனின் ஆட்சிக்காலம். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப் பட்டனர். பலர் சிறையில் தள்ளப்பட்டனர். இரத்த சாட்சிகளாய் இவ்வுலகத்தில் மாண்டனர்.


Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

ஓர்நாள் ஆரிஜனும் கைது செய்யப்பட்டார். கிறிஸ்தவராக மாறியதினாலும், பிறரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்ததினாலும், அவரைக் கொடுமைப்படுத்தினர். ஓர் மேசையில் அவர் கிடத்தப்பட்டார். பாரம் மிகுந்த சுமை அவர் உடலின் மேல் வைக்கப்பட்டது. கால்களையும், கைகளையும் பிடித்து இழுத்துத் துன்புறுத்தினர். தந்தையைப் போன்று ஆரிஜன் தன் விசுவாசத்தில் உறுதியாக நின்றார். எந்தக் கொடுமைகளும் அவரை ஒன்றும் செய்ய இயலாமல் ஏமாந்துபோயின.

கிரேக்கத் தத்துவ ஞானங்களையும், வேத சாஸ்திரங்களையும் இளமையிலே கற்று கிறிஸ்துவின் சிறந்த தொண்டராய் வாழ்ந்து பிறரையும் கிறிஸ்துவின் வீரர்களாய் மாற்றிய இவர் கி.பி 251இல் தம் பணியை நிறைவு செய்தார்.

**அன்பரே! உங்களைப்பார்த்து பிறர் இறைவனை தேடுகிறார்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** இறைவனுக்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டவனைப் போல் உலகத்தில் சுதந்திரமாக வாழ்கிறவன் யாருமில்லை

— ஜீவ நீரோடை —

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 27**



# பெர்ப்பெத்துவா 181 - 203

## விசுவாசத்தில் வீரம்

செப்டிமஸ் செவேருஸ் என்ற கொடுங்கோலன் ரோமை ஆட்சி செய்து வந்த காலம். கி.பி 3ஆம் நூற்றாண்டின் துவக்கம் அது. கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். சிறையில் தள்ளப்பட்டு சித்தரவதை செய்யப்பட்டனர். சிங்கங்களுக்கு இரையாகப் போடப்பட்டனர். பலர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

பெர்ப்பெத்துவா, உயர்ந்த குலத்தைச் சார்ந்த ஒரு பெண். பெலிசித்தாள் என்பவர் அவளுடைய அடிமை. இருவரும் கிறிஸ்துவின் மேல் மிகுந்த பற்றுக் கொண்டு, தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாகக் காட்டி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். கொடுங்கோல் அரசனுக்கு இச் செய்தி எட்டியது. இருவரும் பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெர்ப்பத்துவாவின் கைகளிலோ சிறு ஆண்குழந்தை. பெலிசித்தாள் ஒரு நிறைமாத கர்ப்பிணி. எனினும் இவர்கள் தங்கள் விசுவாசத்தை மறுதலிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாயினர். ஆனால், இருவரும் தங்கள் விசுவாசத்தில் உறுயாக நிலைத்து நின்றனர். பெர்ப்பெத்துவாவின் தந்தை எவ்வளவோ கெஞ்சி மன்றாடிக் கேட்டக்கொண்ட பின்பும் அவள் கிறிஸ்துவின் மேல் உள்ள அன்பைவிட்டு விலகவில்லை.

அது ஒரு இருள்படிந்த நாள். வீரப்பெண்மணிகளின் உயிரைப் பறிக்கவே பிறந்த நாள். ஆயினும், இரத்த சாட்சிகளுக்கு மகுடம் சூட்டப்படும் நாள். அரசன் தன் வீரர்களுக்கு கட்டளை கொடுத்தான். விசுவாசப் பெண்மணிகளின் தலைகள் துண்டிக்கப்பட வேண்டும் என்பதுவே அவன் கட்டளை. இதனால் கிறிஸ்தவர்கள் பயந்துவிடுவர் என அவன் எண்ணினான்.

தங்கள் உயிரைக் காப்பாற்றக் கொடுக்கப்பட்ட கடைசி தருணத்தையும் கிறிஸ்துவுக்காக குப்பையாக்கினர். கிறிஸ்தவர்கள் அவர்களுக்காக உருக்கமாக வேண்டுதல் செய்ய அனைவர் கண்களுக்கு முன்பாகவும் தலை வெட்டிக் கொல்லப்பட்டனர். கிறிஸ்துவின் வீராங்கனைகள் விண்ணில் மகிழ்ந்தனர்.

**அன்பரே! மரணம் வரை கிறிஸ்துவுக்குள் உறுதியாக நிலைத்து நிற்பீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: வீரமுடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் கிறிஸ்துவுக்காக பாடுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். — பெர்பெத்துவா**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 08**

---

## விடையளி 124
### சரியான பதில்கள்

01. கிதியோன் - நியாயாதிபதிகள் 6:15
02. இழிவான ஆதாயத்தை இச்சிப்பவர்கள் - தீத்து 1:11
03. துன்மார்க்கர் - நீதிமொழிகள் 21:12
04. யாக்கோபின் குடும்பமும், இஸ்ரவேல் வம்சமும் - எரேமியா 2:11
05. கர்த்தர் - உபாகமம் 31:20
06. அபிமெலேக்கு, அகுசாத்து, பிகோல் - ஆதியாகமம் 26:29
07. எளியவனாகிய சகோதரனுக்கு கடன் கொடமலிருப்பது - உபா. 15:7-9
08. எஸ்றாவின் நாள்களில் சொல்லப்பட்ட கட்டளைகளை மீறுகிறவர்களுக்கு - எஸ்றா 6:11
09. சவுல் - 1சாமுவேல் 15:24
10. யோசியா ராஜா - 11இராஜாக்கள் 23:3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைவர்/தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம் – இலங்கை.




**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.**
**ஏசாயா 43:19**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனல் வாசகர்கள் யாவருக்கும் புதுவருட வாழ்த்துக்களை சீயோன் தேவாலயத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்வதுடன் இவ் 2025ஆம் ஆண்டின் முதலாவது அனல் சஞ்சிகை வாயிலாக உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2024ஆம் ஆண்டு முழுவதும் எம்மை ஆண்டவர் பாதுகாத்து வழிநடத்தி, இப் புதிய வருடத்தில் பிரவேசிக்க கிருபை கொடுத்துள்ளார். அவர் ஒருவருக்கே துதிகன மகிமை உண்டாவதாக.

கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஆண்டவர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம்:

**மீகா 4:10**

**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீக்கலாக்கி மீட்பார்.**

இதனை நினைவு கூருகின்றோம். நிச்சயமாகவே கடந்த ஆண்டில் ஆண்டவர் தேவ பிள்ளைகளுடைய வாழ்விலே, திருச்சபையிலே மாத்திரமல்ல எங்களுடைய தேசத்திலும் மீட்பின் ஆண்டாக நமக்கு அருளி நம்மை நடத்தி வந்த விதத்தை எண்ணி அவருக்கே மகிமை செலுத்துகின்றோம்.

பிறந்திருக்கும் இப்புதிய வருடமாகிய 2025ஆம் ஆண்டிலும் ஆண்டவர் நமக்கு கொடுக்கும் வார்த்தை:

**ஏசாயா 43:19**

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.**

**Isaiah 43:19**

**Behold, I will do a new thing.**

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா ஏறத்தாள 40 வருடங்கள் தீர்க்கதரிசியாக இருந்துள்ளார். இவ் ஏசாயாவினுடைய தீர்க்கதரிசன ஊழியம் எருசலேமை மையமாகக் கொண்டு நடைபெற்றுள்ளது. இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலனாகிய பவுல், அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் அப்போஸ்தலனாகிய யோவான் போன்றவர்கள் மற்றைய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை விட அதிகமாக ஏசாயா தீர்க்கதரிசன புத்தக வசனங்களைத் தான் தங்கள் ஊழிய காலத்தில் உபயோகித்துள்ளனர்.

ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில் 42 மற்றும் 43 ஆம் அதிகாரங்களை அவதானிப்போமாக இருந்தால் ஆண்டவர் தன் சொந்த ஜனமாகிய யாக்கோபு மற்றும் இஸ்ரவேலர்கள் மத்தியில் தான் செய்துள்ள மற்றும் செய்யப்போகின்ற மகத்துவமான புதிய காரியங்கள் நிமித்தம் சாட்சிகளாக இருக்க வேண்டும் என்பதையும் ஆண்டவர் இல்லாமல் வேறு இரட்சகர் இல்லை என்பதனையும் தீர்க்கதரிசி வலியுறுத்தி இருப்பதாக அவதானிக்க முடியும்.

ஆகவே பாபிலோனில் உள்ள தன் சொந்த ஜனத்தை மீட்டெடுப்பது மட்டுமல்ல அவர்களை பாதுகாப்புடனும் சுகத்துடனும் தங்கள் சொந்த தேசத்திற்கு கூட்டிச்சேர்ப்பதற்காக:

**ஏசாயா 43:19 இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்**

என்று ஆண்டவர் வாக்குகொடுப்பதனை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கு தீர்க்கதரிசி ஏசாயா வுக்கு ஊடாக தன் சொந்த ஜனங் களுக்கு வாக்குப்பண்ணிய அதே ஆண்டவர் பிறந்திருக்கும் இவ் 2025 ஆவது புதிய ஆண்டில் தன்னுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கும்: **'புதிய காரியத்தை செய்கிறேன்'** என்று வாக்குப்பண்ணுகிறார்.

"புதிய காரியம்" என்கிற பதத்திற்கு: வசந்தம், புதுமை, அபூர்வம், அண்மைக் காலத் தைச் சார்ந்தது, புதுப்பிக்கப்பட்ட ஒன்று, முன்பு அறிந்திராதது, புதுவரவு, புதுமையானது, நவீனமான, நூதன மான, வாடாதது, வியப்பு போன்ற பல அர்த்தங்களை கொண்டது. இஸ்ர வேலின் ஆண்டவர் அவர் சாதாரண மானவர் அல்ல; அவர் வித்தியாசமான வர், அவருடைய கிருபைகளே காலை தோறும் புதியது என்றால் அவருடைய செயல்களும் எப்போதும் புதியது.

எனக்கு அருமையான தேவ பிள்ளைகளே நீங்கள் ஆராதிக்கின்ற, சேவிக்கின்ற ஆண்டவர் உங்கள் வாழ்விலும்; 'புதிய காரியத்தை செய்ய ஆயத்தமாக இருக்கிறார்'. ஏனென்றால் அவர் நாமம் அதிசயமானவர். அந்த அதிசயமானவர் தன் பிள்ளைகளாகிய உங்கள் வாழ்விலும் அதிசயமான, புதுமையான புதிய காரியங்களைச் செய்ய வல்லமையுள்ளவர்.

**ஏசாயா 43:19 இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர் களா? நான் வனாந்தரத்திலே வழியை யும், அவாந்தரவெளியிலே ஆறுகளை யும் உண்டாக்குவேன்.** இவ் வசனத்தில் இரண்டு விதமான செயல்களையும் ஆண்டவர் குறிப்பிடுவதைக் காண முடிகின்றது.

**1. வனாந்தரத்திலே வழியை உண்டாக்குவேன்**

**2. அவாந்தர வெளியிலே ஆறுகளை உண்டாக்குவேன்**

ஆம் வழி தெரியாத அல்லது வழி கண்டுபிடிக்க முடியாத இடம் தான் வனாந்தரம் ஆகும். அது போலவே தண்ணீர் காணப்படமுடியாத இடம் தான் அவாந்தரவெளியாகும். இது தான் வழமையாக இதற்கு கொடுக்கப்படு கின்ற விளக்கம். ஆனால் இவ் வழமை களை மாற்றக்கூடிய அல்லது இந்த நிலைமைகளை அதிசயமாக திருப்பக் கூடிய அல்லது புதிய வழிகளை ஏற்படுத் தக்கூடியவர் 'தான் ஒருவர் மட்டுமே' என்பதனை ஆண்டவர் மிகத் தெளிவாக ஏசாயாவுக்கு ஊடாக வலியுறுத்து கின்றார்.

ஆண்டவர் உலக வழக்கத்திற்கோ மனித ஞானத்திற்கோ மட்டுப்பட்டவர் அல்ல. எனவே தன்னுடைய பிள்ளை களாகிய உங்கள் வாழ்விலும் ஆண்டவர் இந்த புதிய வருடத்தில் நீங்கள் முன் னொருபோதும் கண்டிராத அல்லது அனுபவித்திராத புதுமையான அதிசயங் களை, வசந்தங்களை நடப்பிக்க அவர் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார்.

உண்மையாக நடைபெற்ற ஒரு சம்பவத்தை பகிர்ந்து கொள்ள விரும்பு கின்றேன்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான் நாட்டிலே செல்வச் செழிப்புமிக்க குடும்பத்திலே குல்ஸ்தான் என்ற பெண்மணி பிறக்கின்றாள். அவள் பிறப்பின் நிமித்தம் மிகுந்த சந்தோஷம் அடைந்த குடும்பம் நாளடைவில் அவள் பிறப்பின் நிமித்தம் மிகுந்த துக்கமடைந்தார்கள். காரணம் அவள் நடக்க முடியாத பிறவியிலே முடமானவளாக காணப்பட்டாள். இதினிமித்தம் முழுக்குடும்பமும் வேதனைக்குட்பட்டார்கள். அவள் நடக்க வேண்டும் என்று அவளைப் பாடையிலே வைத்து சுமந்து அவர்கள் வணங்கக்கூடிய அனேக புனித ஸ்தலங்களுக்கு கொண்டு சென்றார்கள். அவளுடைய குடும்பத்தினர் எண்ணெய் கிணறுகளை தம் செல்வச் செழிப்பின் அடையாளமாக வைத்திருந்தபடியால் அவர்கள் செல்லாத ஸ்தலங்களோ வேண்டாத தெய்வங்களோ இல்லை. அவளும் தன்னுடைய வழிபாட்டு முறையிலே அதிக வைராக்கியமுள்ளவளாய் ஒவ்வொரு நாளும் தான் வணங்கும் தெய்வம் தன்னுடைய நிலமையை மாற்றுவார் என்பதில் உறுதியாக இருந்தாள்.

ஆனால் காலப்போக்கில் தான் சுகம் பெற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு வழியும் பயனும் இல்லாமையால் தான் வாழ்ந்து இனி பிரயோஜனம் இல்லை என்று தன்னையே நோகத் தொடங்கினாள். எனவே தான் சாக வேண்டும் என்று விரும்பினாள்.

இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருந்த போது ஒரு நாள் தன் படுக்கையிலே இருந்து உண்மையான தெய்வம் இருப்பதாக இருந்தால் என்னுடைய இந்த நிலையை மாற்றட்டும் என்று கதறி அழுதாள். அப்போது சடுதியாக அவள் இருந்த அறையிலே சூரியனைவிட பலமடங்கு அதிகமான வெளிச்சம் பிரகாசிக்கத் தொடங்கியது. அங்கே நீண்ட வெள்ளை அங்கி தரித்த ஒருவர் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" குல்ஸ்தான் நீ இருக்கின்ற உன்னுடைய இந்த நிலமையை மாற்றி உன்னை புதிதாக்க விரும்புகிறேன். நானே சகலவற்றின் மீதும் அதிகாரம் கொண்டவராக இருக்கிறேன். நீ எழுந்து காலூன்றி நில் என்றார். உடனே குல்ஸ்தான் குதித்தெழுந்து நடந்தாள். "கர்த்தரே தெய்வம்" என்று அறிக்கை இட்டாள்.

அவள் வாழ்க்கை புதிதாக மாற்றப்பட்டவளாக தன்னுடைய பெயரை குல்ஸ்தான் எஸ்தர் என்று மாற்றினாள். தன் இனத்திற்கு தன்னுடைய புதிய வாழ்க்கையை அறிவிக்கிறவளாக மாறினாள்.

இந்த வாக்குத்தத்த வசனத்தில் அடங்கியிருக்கிற ஆண்டவருடைய மகத்துவமான அல்லது புதுமையான செயல்கள் இரண்டினை தொடர்ந்து அவதானிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. வனாந்தரத்திலே வழியை உண்டாக்குவேன்

**யோசுவா 6:1-5 (1.) எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப் பட்டிருந்தது: ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை. 2. கர்த்தர் யோசுவாவை நோக்கி: இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன். 3. யுத்தபுருஷராகிய நீங்கள் அனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஒருதரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள். 4. ஏழு ஆசாரியர்கள் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக் கொண்டு போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கட வர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊத வேண்டும். 5. அவர்கள் அந்தக் கொம்பு களினால் நெடுந்தொனி இடும் போதும், நீங்கள் எக்காளச்சத்தத்தைக் கேட்கும் போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவரவர் தாங்களுக்கு நேராக ஏறக்கட வர்கள் என்றார்.**

இங்கே இஸ்ரவேல் ஜனங்களின் கானான் பிரயாணத்திற்கு தடையாக எரிகோ காணப்பட்டதனை நாம் அவதானிக்கலாம். தேவ மனிதன் யோசுவா வேவுகாரரை அனுப்பி ஏற்கனவே இந்த எரிகோவைக்குறித்து அறிந்து கொண்டான். மிகப்பெரிய மதிலால் சூழப்பட்ட அலங்கமுள்ள ஒரு பட்டணம். அதன் வாசல் அடைபட்டால் உட்செல்லவோ, வெளிச் செல்லவோ முடியாத ஒரு சூழ்நிலை. அதனால் தான் வேவுகாரர் தப்பிப் போகும் போது கயிறு மூலம் இறக்கி விடப்படவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதை காண்கிறோம். **யோசுவா 2:15 அப்பொழுது அவர்களைக் கயிற்றினாலே ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள். அவள் வீடு அலங்கத்தின் மதிலில் இருந்தது; அலங்கத்திலே அவள் குடியிருந்தாள்.**

இப்படிப்பட்ட பெரிய பாதுகாப்பான பட்டணம் அவர்களுக்கு முன்பதாக தடையாக நின்ற போது அவர்கள் எப்படி அந்த தடையை தாண்டிச் செல்ல முடியும் என வழி தேடிக்கொண்டிருந்த போது ஆண்டவர் யோசுவாவையும் இஸ்ரவேலரையும் நோக்கி அந்த பட்டணத்தை ஆறு நாட்கள் ஒவ்வொரு தடவை சுற்றிவரப்பண்ணுகிறார். அதன்பின் ஏழாம் நாள் ஏழு தரம் சுற்றிவரப்பண்ணி மகா ஆர்ப்பரிப்பை தொனிக்கப்பண்ணினார். **யோசுவா 6:20 எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், அலங்கம் இடிந்துவிழுந்தது; உடனே ஜனங்கள் அவரவர் தாங்களுக்கு நேராகப் பட்டணத்தில் ஏறி, பட்டணத்தைப் பிடித்து**, உடனே இஸ்ரவேலருக்கு தடையாக காணப்பட்ட அந்த பெரிய மதில் சூழப்பட்ட அலங்கம் இடிந்து விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது புதுமையான வழி அல்லவா! இயற்சூழலில் இப்படிப்பட்ட அலங்கம் இடிக்கப்பட வேண்டும் என்றால் ஆமார், சுத்தியல் போன்ற கருவிகளும் தற் போதைய நிலையில் பக்கோ போன்ற கனரக வாகனங்களும் தேவையாக இருந்திருக்கும். ஆனால் இவை ஒன்றும் இல்லாத சூழ்நிலையில் வெறும் ஆர்ப்பரிப்பைக் கொண்டு 'வழியை ஏற்படுத்திக் கொடுக்க வல்லமையுள்ள வர்' தாம் ஒருவர் மட்டுமே என்பதை நிரூபித்து **தன் பிள்ளைகளாகிய இஸ்ரவேலருக்கு வழியை ஏற்படுத் தினார்.**

'வழியை ஏற்படுத்துவேன்' என்பது எதனைக் குறிக்கும் என்றால்: **அது நாம் கடந்து செல்லும் பாதையைக் குறிக்கும் அல்லது ஆண்டவருடைய நடத்துதலைக் குறிக்கும் அல்லது ஆண்டவர் நம்மோடு பயணிப்பதைக் குறிக்கும்.** எனவே தேவ பிள்ளைகளே உங்கள் வாழ்வின் சூழ்நிலை, குடும் பத்தின் சூழ்நிலை, தொழில் ரீதியான நிலமைகள், உங்கள் எதிர்கால நிலமை கள் அனைத்தும் வனாந்தரம் போன்று வழிகள் இல்லாத சூழ்நிலையில் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறீர்களா? உங் களுக்கு முன்பதாக வழிகள் தோன்றக் கூடிய சாத்தியமற்ற தடைகள் எழும்பிக் காணப்படுகின்றதா? அலங்கம் போல அல்லது மலை போல பிரச்சினைகள் நீங்கள் முன்னேறாதபடி அல்லது பாதை தெரியாதபடி தடையாக இருக்கின்றதா? ஆண்டவருடைய பிள்ளைகளாக அவருக்கு உங்களுடைய முழு வாழ்க் கையையும் அர்ப்பணித்து பரிசுத்தமாக இந்த 2025 ஆவது ஆண்டில் வாழ தீர்மானம் எடுப்பீர்களாக இருந்தால் யோசுவாவுக்கும் இஸ்ரவேலர்கள் அனைவருக்கும் புதிய காரியத்தை அல்லது புதுமைகளை செய்து வழியை ஏற்படுத்தின அதே ஆண்டவர் நீங்கள் அவரை ஆராதித்து, அவரை உயர்த்தி ஆர்ப்பரிப்பீர்களாக இருந்தால் நிச்சய மாக உங்களுக்கும் 'சாத்தியமற்ற நிலைகளிலும் புதிய காரியத்தை செய்து வழிகளையும், வசந்தங்களையும் உண் டாக்க அவர் வல்லமையுள்ளவர்'.

## 2. அவாந்தர வெளியிலே ஆறுகளை உண்டாக்குவேன்

**நியாயாதிபதிகள் 15:16-19 (16.) அப்பொழுது சிம்சோன்: கழுதையின் தாடையெலும்பினால் குவியல் குவிய லாகப் பட்டுக்கிடக்கிறார்கள், கழுதை யின் தாடையெலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றேன் என்றான். 17. அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையிலிருந்த தாடையெலும்பை எறிந்து விட்டு, அவ்விடத்திற்கு ராமாத்லேகி என்று பெரிட்டான். 18. அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையில் விழவேண்டுமோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றான். 19. அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப் பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது; அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது. அவன் பிழைத் தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள் வரையும் லேகியில் இருக்கிறது.**

சிம்சோனுடைய வாழ்வில் நடைபெற்ற ஓர் சம்பவத்தை இங்கு காண முடியும். அவனுக்காக நிச்சயிக்கப்பட்ட மனைவி வேறு மனுஷனுக்கு மனைவி யாக கொடுக்கப்பட்டதனால் அந்த பெண்ணின் தகப்பன் சிம்சோன் அவனுடைய மனைவியிடம் சேர அனுமதிக்காத போது அவனுக்கு கோபம் வந்து பெலிஸ்தரின் வயல் நிலங்களை அழித்துவிடுவதனை நியாயாதிபதிகள் 15ஆம் அதிகாரத் தில் காணமுடியும். இவ்விதமான அழிவைக் கேள்விப்பட்ட பெலிஸ்தர் எழும்பி அவனை கொலை செய்ய சதி செய்து அவனை சூழ்ந்து கொண்ட போது தனி ஒருவனாக ஒரு கழுதை யின் தாடையெலும்பினால் அத்தனை பேரையும் அழித்து பெரிய வெற்றியை அடைந்த பிற்பாடு அவனுக்கு தாகம் ஏற்பட்டது. தனியொருவனாக ஆயிரம் பேர் அவனுக்கு முன்பாக யுத்தம் பண்ண வந்த போதும் சிம்சோனுடைய பலத்திற்கு முன்னால் ஆயிரம் பேருக் கும் நிற்க முடியவில்லை.

அப்படிப்பட்ட ஒரு பலவான்தான் சிம்சோன். ஆனால் தற்பொழுது தண்ணீர் இல்லாமல் தன் சுயஜீவனை அவனால் காப்பாற்ற முடியவில்லை. பெற்றுக்கொண்ட இவ்வளவு வெற்றியும் வீண், இவ்வளவு யுத்தமும் வீண். இனி தான் சாகத்தான் வேண்டும், இது தண்ணீர் உருவாகக்கூடிய இடம் இல்லை என்ற சூழ்நிலையில் தண்ணீர் தோன்றக்கூடிய நிலை இல்லாமல் மரணத்தை எதிர்நோக்கிய சூழலில் ஆண்டவரை நோக்கிப் பார்த்தான். அப்போது பள்ளம் தானாக அங்கே வெட்டப்படுகிறது. அதற்குள் தண்ணீர் தானாக ஓடிவருகிறது. இது புதுமை அல்லவா!. இது முன்னொருபோதும் நடைபெற்றிராத ஒரு அபூர்வ வசந்தம் அல்லவா! ஆண்டவர் தன்னை நோக்கி கூப்பிட்ட சிம்சோனை 'ஒரு புதிய காரியத்தை கொடுத்து அவனை பிழைக் கப்பண்ணினார்'. அவர் அவனைக் கைவிடவில்லை. **அவாந்தர வெளியில் அவனுக்கான ஆறுகளை உண்டாக் கினார் நமது ஆண்டவர்.**

ஆகவே எமது ஆண்டவர் 'இல்லாத வைகளை இருக்குமாப்போல் அழைப்ப வர்' இதற்காகவே சிம்சோன் அழகாய் பெயரிட்டான் 'எந்நக்கோரி'. இது ஒரு எபிரெய பதம். இது ஒரு தடவை மட்டுமே வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனுடைய அர்த்தம் 'அதிசயமாக தோன்றிய வசந்தம்'. பள்ளம் வெட்டக் கூடிய சூழல் இல்லாதவிடத்தும் தண்ணீர் தோன்றக்கூடிய சூழல் இல்லாதவிடத் தும், பள்ளத்தையும் ஏற்படுத்தி, தண்ணீ ரையும் ஏற்படுத்தக்கூடிய புதுமையான காரியத்தைச் செய்ய ஆண்டவர் ஒருவருக்கு மட்டுமே வல்லமையுண்டு.

இன்று நீங்கள் பல வருட கிறிஸ்த வர்களாக அல்லது ஆண்டவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்க முடியும். எப்படியிருந்தாலும் அனேகருடைய வாழ்விலே ஆண்டவர் ஏன் எனக்கு அதிசயம் செய்யவில்லை? ஏன் எனக்கு அற்புதம் செய்யவில்லை? ஆறுகள் தோன்றுவதற்கான சாத்தியமோ அல்லது அதிசயம் நடப்பதற்கான சாத்தியமோ இல்லை என்று சோர்ந்து போய் காலங்களை கழித்துக் கொண்டிருக்க முடியும். இவ்விதமான பாதகமான சூழ்நிலைக்கு மத்தியிலும் வருடம் பிறக்கும் வருடம் முடியும் இது வழமை. ஆகவே எது நடைபெறுகிறதோ அது நடக்கட்டும் என்று வழமையான பாணியில் இந்த 2025ஐ எதிர்கொள்ள ஆயத்தமாய் இருக்கமுடியும். அற்புதம் அல்லது அபூர்வம் அல்லது வசந்தம் தோன்றுவதற்கு சந்தர்ப்பம் அற்றதாகவே இப்போதும் இருக்க முடியும். ஆனால் இப்படிப்பட்ட பாதகமான சூழ்நிலைக்கு மத்தியிலும் உண்மையாகவே நீங்கள் ஆண்டவருடைய பிள்ளை என்றால் இந்த 2025 உங்களுக்கு இன்னும் ஓர் வழமையான ஆண்டாக அல்லாமல் 'ஆண்டவர் உங்கள் வாழ்வில் புதிய காரியங்களைச் செய்யும் அல்லது அபூர்வ வசந்தங்கள் தோன்றும் ஆறுகள் தோன்றும் ஓர் உன்னதாக ஆண்டாக அமையும்'.

இறுதியாக ஆண்டவரை விடுத்து தாமாக தமக்கான வழிகளை உண்டாக்கி, தமக்கான ஆறுகளையும் உண்டாக்க முற்படுபவர்கள் கவனமாக இருப்பதற்கு வேதாகம சம்பவத்தை காண்பிக்க விரும்புகின்றேன்.

**ஆதியாகமம் 13:16-18 (16.) உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். 17. நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன் என்றார். 18. அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின் சமபூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.**

ஆபிரகாம் - சாராள் பிள்ளை இல்லாத சூழ்நிலைக்கு முகங்கொடுத்துக் கொண்டிருந்த போது ஆண்டவர் அவனுக்கு கொடுத்த வாக்குத்தத்தம்: 'உன் சந்ததி பூமியின் தூளைப்போல இருக்கும், பூமியின் தூளை எண்ணக் கூடுமானால் உன் சந்ததியும் எண்ணப்படும்' என்று சொன்னார். இத்தனை பெரிய வாக்குத்தத்தம் தமக்கு முன்பிருந்தாலும் இதுவரைக்கும் ஒரு பிள்ளை அவர்களுக்கு இருக்கவில்லை. பிள்ளை பெறுவதற்கு அல்லது பிறக்கக் கூடிய வழியும் அவர்களுக்கு இருக்கவில்லை. இவ்விதமாக பிள்ளை பெறக் கூடிய சூழல் இல்லாத போதும் வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக ஆபிரகாம் ஒருவழியை ஆண்டவருக்கு சொல்வதைக் காண முடியும்.

**ஆதியாகமம் (4.) அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்ப**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி, 5. அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.**

இதில் ஆண்டவர் தெளிவாக ஆபிர காமுக்கு: 'இது உனக்கான வழி அல்ல' என்று ஆபிரகாம் சொல்லிய வழியை அங்கீகரிக்காததனை காணமுடியும்.

ஆனால் காலம் கடந்து செல்லும் போது வாக்குத்தத்தத்தை அடைய அவர்கள் தங்களுக்கான ஆற்றை உண்டாக்கி ஆகார் மூலம் பிள்ளையைப் பெற்றெடுப்பதனை அவதானிக்கலாம். **ஆதியாகமம் 16:2 சாராய் ஆபிராமை நோக்கி: நான் பிள்ளைபெறாத படிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கி றார். என் அடிமைப்பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப் படும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவிகொடுத்தான்.** இவ்வித மாக எப்படியாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஆபிரகாமும் சாரளும் பிராயசத்தோடு வழிகளை ஏற்படுத்த முனைகின்றனர். அத்துடன் தங்களுக்கான ஆறுகளை தாங்களாகவே உண்டாக்க விளைகின் றார்கள். ஆனால் இவைகள் எவையும் ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட வழியும் அல்ல; ஆறுகளும் அல்ல.

வழிகளை உண்டாக்குவது அல்லது ஆறுகளை உண்டாக்குவது ஆபிர காமுடைய வேலையும் அல்ல; சாரா ளின் வேலையும் அல்ல. அதே போல அது உலகத்தின் வேறு யாருடைய தாவது வேலையும் அல்ல. மாறாக அது ஆண்டவர் ஒருவருடைய வேலை என்பதை உறுதிப்படுத்தி புதுமையாக ஆண்டவர் அவர்களுக்கான பிள்ளையை **ஆதியாகமம் 21:3 அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டான்.** கொடுக்கின்றார்.

ஆகவே எனக்கு அருமையானவர் களே நமது வாழ்விலும், நமது குடும் பத்திலும், நமது தொழிலிலும், நமது படிப்பிலும் 2025ஆவது ஆண்டு வழிகளை நாமே ஏற்படுத்த முயற்சிப் போமாக இருந்தால் நினைத்துக் கொள்ளுங்கள்; அது நமது வேலை அல்ல. ஆண்டவர் வழியை ஏற்படுத்து வாராக இருந்தால்; அவரே அதற்கான சகல தேவைகளையும் சந்தித்து நடத்திச் செல்ல போதுமானவர்!. வழிகளை உண்டாக்குவதும் ஆறுகளை உண்டாக்கு வதும் கர்த்தருடைய வேலை மட்டுமே என்பதை புரிந்து கொள்வோம்.

ஆகவே இந்த 2025 புதிய காரியங் கள் அல்லது புதுமைகள் அல்லது வசந்தங்கள் செய்யப்படும் ஆண்டு. யாருக்கு புதிய காரியங்கள் செய்யப்படும்? யாரால் புதிய காரியங்கள் செய்யப் படும்? ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு மட்டுமே ஆண்டவரால் புதிய காரியங் கள் செய்யப்படும். அவரே உங்களை முழுவதும் வழி நடத்தி இதுவரைக்கும் உங்கள் தேவைகளை சந்தித்து உதவின எபினெசர் இனியும் நடத்துவார். ஆகவே இந்த 2025ஆம் ஆண்டு தேவ பிள்ளை களுக்கு வசந்தத்தின் ஆண்டாக அமைவதாக.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**

**பக்தர்கள் பயிலகம் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம் - நன்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வேதப்பகுதி: நீதிமொழிகள் 31:10-21**

அமலாவின் அம்மா அவள் மேலுள்ள அன்பினால் அவளுக்கு தேவையான அனைத்து வேலைகளையும் அவரே செய்வார்.

கோமளாவின் அம்மா வீட்டு வேலை யாவற்றையும் மகள் தான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவார்.

அபியாவின் அம்மா அவள் தனக்கு தேவையானவைகளை அவளே செய்து பழக வேண்டும் என்று விரும்பி உற்சாகப்படுத்துகின்றார்.

உன்னுடைய அம்மா எப்படியிருந்தால் நீ விரும்புவாய்? பிள்ளைகளின் அனைத்து வேலைகளையும் அம்மா செய்தால் பிள்ளைகள் சோம்பேறிகளாகி விடுவார்கள். பிள்ளைகளை அனைத்து வேலைகளையும் செய்யக் கட்டாயப்படுத்தினால் அவர்கள் வேலைக்காரி ஆவார்கள். அபியாவின் அம்மா பின்பற்றும் முறைதான் மிகச் சரியானது.

**சிந்தனைக்கு:-**

**பிள்ளைகளிடம் அன்பு காட்டினால் மட்டும் போதாது. அவர்கள் குடும்ப வேலைகளைச் செய்யப் பழக்கினால் தான் சாமர்த்தியமாக இருப்பார்கள்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் - அக்டோபர் 27

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................


முகவரி:........................................

................................................

................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org